**செய்தி வெளியீடு எண்:242** **நாள்: 27.04.2017**

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பெறும் சிறந்த தமிழ் நூல்களுக்கான பரிசுப்போட்டிக்கு **2016**ஆம் ஆண்டில் (01.01.2016 முதல் 31.12.2016 வரை) வெளியிடப்பட்ட நூல்கள் **33** வகைப்பாடுகளின் கீழ் வரவேற்கப்படுகின்றன. போட்டியில் ஒவ்வொரு வகைப்பாட்டிலும் ஒரு நூல் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு, நூலாசிரியருக்கு ரூ.**30,000/–**ம் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ.**10,000/–**ம் என பரிசுகள் வழங்கப்பெறும். பரிசுப் போட்டிக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் நேரிலோ, அஞ்சல் வாயிலாகவோ, இத்துறையின் வலைதளத்திலோ (www.tamilvalarchithurai.org) பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**தமிழ்வளர்ச்சி இயக்குநர்,**
**தமிழ்வளர்ச்சி வளாகம் முதல் தளம்,**
**தமிழ்ச்சாலை, எழும்பூர்,**
**சென்னை 600 008.**
**தொலைபேசி எண்கள். 28190412 , 28190413**

அஞ்சல் வாயிலாகப் பெற 23X10 செ.மீ அளவிலான சுய முகவரியிட்ட உறையில் **10 ரூபாய்** அஞ்சல்வில்லை ஒட்டி அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

போட்டிக்கான விண்ணப்பத்துடன் **10** நூற்படிகளும் போட்டிக் கட்டணம் ரூ.**100/–** வங்கிகேட்புக் காசோலையாக **'தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை'** என்ற பெயரிலோ அல்லது அலுவலகத்தில் நேரிலோ செலுத்தி அதற்கான செலுத்துச்சீட்டுடன் அளிக்க வேண்டும்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற கடைசி நாள் **31.07.2017.**

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**